**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 1096/ஆ5/2025, நாள்.02/05/2025**

*****

பொருள் பள்ளிக் கல்வி – 2025 ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை விதி எண். 110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு – பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வார விழா 05.05.2025 முதல் 14.05.2025 வரை கொண்டாடுதல் – தொடர்பாக

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 67, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ.1.2) துறை, நாள். 25.04.2025
2. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைகளின் படி.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2025 ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை விதி எண். 110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைகளின் படி, தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களின் ஒருவரான பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு வேலூர் மாவட்டத்தில் **"தமிழ் வார விழா"** 05.05.2025 முதல் 14.05.2025 வரை வேலூர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி மற்றும் குடியாத்தம் அரசு நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் கொண்டாடப்படவுள்ளது.

மேற்கண்டவாறு நடைபெறும் தமிழ் வார விழாவில் 05.05.2025 மற்றும் 06.05.2025 அன்று மாணவர்களுக்கான போட்டிகளும் மற்றும் 05.05.2025 முதல் 14.05.2025 வரை காலை 10.00 மணி முதல் 11.30 மணி வரை நீதிநெறி கல்வி வகுப்புகளும் நடைபெறவுள்ளன. இதில் 3 முதல் 12 வகுப்புகள் வரையிலான விருப்பமுள்ள மாணவர்கள் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிசுகள் வழங்கப்படும்.

| **05.05.2025 அன்று நடைபெறும் போட்டியின் விவரம்** | | | |
|---|---|---|---|
| **போட்டிகள்** | **தலைப்புகள்** | **போட்டி நடைபெறும் இடம்** | **போட்டி நடைபெறும் நேரம்** |
| பேச்சுப் போட்டி<br>கவிதைப் போட்டி<br>கட்டுரைப் போட்டி | 1. பாரதிதாசன் தமிழ்பற்று,<br>2. சமூக சிந்தனை<br>3. பாரதிதாசன் பார்வையில் பெண கல்வி<br>4. பாரதிதாசனின் சமுதாய உணர்வு | 1. ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்<br>2. அரசு நகராட்சி மேல்நிலைப் பள்ளி, குடியாத்தம் | காலை 9.30 மணி முதல் |

| 06.05.2025 அன்று நடைபெறும் திருக்குறள் ஒப்புவித்தல் விவரம் | | | |
|---|---|---|---|
| வகுப்பு | திருக்குறள் ஒப்புவித்தல் | போட்டி நடைபெறும் இடம் | போட்டி நடைபெறும் நேரம் |
| 3-5 | ஏதேனும் 30 திருக்குறள் | 1. ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்<br>2. அரசு நகராட்சி மேல்நிலைப் பள்ளி, குடியாத்தம் | காலை 9.30 மணி முதல் |
| 6-8 | ஏதேனும் 50 திருக்குறள் | | |
| 9-10 | ஏதேனும் 100 திருக்குறள் | | |
| 11-12 | ஏதேனும் 150 திருக்குறள் | | |
| பொது | ஏதேனும் 200 திருக்குறள் | | |

02/05/2025

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

02-05-25

பெறுநர் –
தலைமையாசியர்கள் / முதல்வர்கள்
அனைத்து வகை பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. தலைமையாசிரியர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்
4. தலைமையாசிரியர், அரசு நகராட்சி மேல்நிலைப் பள்ளி, குடியாத்தம் (போதிய இடவசதி செய்து தர தெரிவிக்கப்படுகிறது.)